# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.07.31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இறக்குமதிசெய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்; அத்துடன் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி எந்த முறையில் தீர்மானிக்கப்படவேண்டுமோ அந்த முறையைவிதித்துரைப்பதற்கு அவரை இயலச்செய்வதாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட கம்பெனிகளினால் குறித்தசில தைத்த ஆடைகளின் உள்நாட்டு விற்பனையின் மீதான வரித்தொகையை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சேபெ வரியின் கொடுப்பனவுத் தேதியை மாற்றுவதாகும்.

***வாசகம் 5 :*** இவ்வாசகம், வீட்டாதன வீடமைப்புக் கூறுகளை வழங்குதல் தொடர்பாகப் பதிவுசெய்யப்பட்ட விற்பனை உடன்படிக்கை 2019, ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படுமிடத்து அத்தகைய வழங்கல்மீது விதிக்கப்பட்ட சேபெ வரியை விலக்களிக்கின்ற 2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்குப் பயன்கொடுப்பதற்கெனவும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட அரிசி உற்பத்திப்பொருட்கள்மீது ஏற்புடையற்பாலதான விலக்களிப்பை அரிசி தவிட்டெண்ணெய்க்கு நீடிப்பதற்கெனவும் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் II ஐ திருத்துவதாகும்.

ச. வ.- ஓ. 5/2019

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி.

6. (1) ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான பண்டங்கள் நீங்கலாக, இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி பின்வருவனவற்றின் கூட்டுமொத்தமாதல் வேண்டும் :-

(அ) சுங்கத்தீர்வையின் நோக்கத்துக்காகத் தீர்மானிக்கப்பட்ட பண்டங்களின் பத்து சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட பெறுமதி; அத்துடன்

(ஆ) அத்தகைய பண்டங்களின் மீதான ஏதேனும் மிகைக் கட்டணம், ஆயவரி 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ்

செலுத்தப்படற்பாலதான ஏதேனும் உற்பத்தித்தீர்வை என்பவற்றைச் சேர்த்து அத்தகைய பண்டங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சுங்கத்தீர்வையின் தொகை.

(2) அமைச்சர், காலத்துக்குக்காலம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி எம்முறையின்மூலம் தீர்மானிக்கப்படவேண்டுமோ அம்முறையை ஒழுங்குவிதிமூலம் விதித்துரைக்கலாம். அமைச்சரினால் ஆக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதலும் அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன்மீது மட்டுமே பயனுடையதாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில், (iii) ஆம், (iv) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

"(iii) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்ட, மகளிர் உட்காற்சட்டைகள் (panties), குறுங்காலுறைகள், பிறீவுகள் மற்றும் பொக்சர் குறுங்காற்சட்டைகள் தவிர்ந்த அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும், 2018, ஓகத்து 16 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2019, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் 2019, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு நூறு ரூபாவாதலும் வேண்டும்;

(iv) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட ஆறு எண்ணிக்கையினவான மகளிர் உட்காற்சட்டைகள் (panties), குறுங்காலுறைகள், பிறீவுகள் மற்றும் பொக்சர் குறுங்காற்சட்டைகளுக்கு, 2018, ஓகத்து 16 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2019, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் 2019, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு நூறு ரூபாவாதலும் வேண்டும்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அதன் (1அ) என்னும் உட்பிரிவில், "2013, சனவரி 1 ஆந் தேதியன்றுள்ள அல்லது அதன் பின்னரான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2013, சனவரி 1 ஆந் தேதியன்றுள்ள அல்லது அதன்பின்னரான ஆனால் 2019, யூலை 1 ஆந் தேதிக்கு முன்னரான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஆ) என்னும் பந்தி இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பந்தியின் (xi) ஆம் விடயத்தில் –

(அ) உபவிடயம் (ஆ)வில், "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் வதிவிட இடவசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர, எவரேனுமாளினால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எவரேனுமாளினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) உபவிடயம் (இ) இல், ''பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்தும், அத்துடன் -

(iii) ஏதேனும் கூட்டாதன வீடமைப்புக் கூறின் விற்பனை தொடர்பானதாகவிருக்கு மிடத்தும், இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி நிறைவேற்றப்படுகின்ற அத்தகைய வழங்கல் தொடர்பில் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்று உள்ளவிடத்தும்; அல்லது

(iv) அத்தகைய வழங்கல் தொடர்பில் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் இயைபான உள்ளூரதிகார சபையினால் எந்த கூட்டாதன வீடமைப்புக் கூறு தொடர்பில் இசைந்தொழுகுகைச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த கூட்டாதன வீடமைப்புக்கூறின் வழங்கலொன்றாக உள்ளவிடத்தும்.";

(2) (xxvi) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(xxvi) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உடன்பால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவுவரை அத்தகைய பாலிலிருந்து, சேர்க்கப்பட்ட சீனி அல்லது வேறு இனிப்பூட்டும் பொருளைக் கொண்டுள்ள பால்மா தவிர்ந்த உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாற்பண்ணை உற்பத்திப்

பொருட்களும் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியைக் கொண்டுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி உற்பத்திப்பொருட்களும் 2019, யூலை 1 ஆந் தேதியிலிருந்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்ட உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட அரிசித் தவிட்டெண்ணையும்;".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.